*15*

# எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம்

## (பிலிப்பியர் 4:4–7)

*இடர்ப்பாடு மிகுந்த நமது உலகம் சமாதானத்தை நாடி ஏங்குகிறது. போரினால் சிதைக்கப்பட்ட நாடுகளில் வாழ்பவர்கள், தங்களைச் சுற்றிலும் உள்ள மரணத்தையும் அழிவையும் கண்ணோக்கி, சமாதானத்திற்காகக் கதறுகின்றனர். சிலர், போராட்டத்தினால் கிழித்துப் பிரிக்கப்பட்ட நாடுகளில், அயலகங்களில் அல்லது குடும்பங்களில் வாழ்கின்றனர், அவர்கள் சமாதானம் வேண்டுமென்று பெருமூச்சுடன் நாடி ஏங்குகின்றனர். மற்றவர்கள், சமாதானம் நிறைந்த சூழ்நிலைகளில் வாழுகின்றனர், ஆனால் அவர்கள் இருதயங்கள் பிரிவினை மற்றும் பெருவருத்தம் ஆகியவற்றினால் நிறைந்துள்ளன; அவர்கள் மனசமாதானத்திற்காக ஏங்குகின்றனர்.*[1]

*நாம் சமாதானம் உடையவர்களாக இருக்க வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். இயேசுவின் பிறப்பு, "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக" என்பதைக் கொண்டு அறிவிக்கப்பட்டது (லூக்கா 2:14). கிறிஸ்து தமது மரணத்திற்கு முன்பு தமது சீஷர்களுடன் இருந்த கடைசி மணி வேளைகளில், அவர்களிடம் அவர் பின்வருமாறு கூறினார்:*

> *சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக (யோவான் 14:27).*

> *என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார் (யோவான் 16:33).*

*நாம் ஏன் சமாதானம் கொண்டிருப்பதில்லை? குறைந்த பட்சம் இரண்டு தடைகள் நிலவுகின்றன: முதலாவது, உண்மையான சமாதானம் என்றால் என்ன என்பதைப் பலர் புரிந்துகொள்வதில்லை; சமாதானம் பற்றிய அவர்களின் கருத்தானது அடிக்கடி, சமாதானம் நிறைந்த சூழ்நிலைகள் அல்லது போராட்டங்கள் இல்லாமை என்பதோடு எல்லைப்படுத்தப்படுகிறது. இரண்டாவது, உண்மையான, முழுமையும் திருப்திபடுத்துகிற மற்றும் நிலையாக நிற்கிற ஒரே சமாதானம் கர்த்தரிடத்தில் இருந்தே வருகிறது என்பதைப்*

பெரும்பான்மையானவர்கள் புரிந்துகொள்வதில்லை.

இந்தப் பாடம் மற்றும் இதற்கு அடுத்த பாடம் ஆகியவற்றிற்கான வேத வசனப் பகுதிகளில் பவுல், தமது வாசகர்களுக்கு விரைவான வரிசையில் கடைசி அறிவுறுத்துதல்களைக் கொடுத்தார் (காண்க 4:8). பிலிப்பியர் 4:4-9 வசனப் பகுதியானது, வேதாகமத்தில் மிகவும் உயர்த்திப் பிடிக்கப்படுகிற வசனங்கள் சிலவற்றைக் கொண்டுள்ளது. சமாதானம் என்பது ஒரு திறவுகோல் தலைப்பாக உள்ளது: ''அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்'' (4:7); "அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்" (4:9ஆ). வார்ரென் W. வயர்ஸ்ப் என்பவர் பிலிப்பியர் 4ம் அதிகாரத்தை "புதிய ஏற்பாட்டின் 'சமாதான அதிகாரம்' " என்று அழைத்தார்.[2] இந்த எடுத்துரைப்பில் நாம், 4 முதல் 7வரையிலான வசனங்கள் மீது கவனம் செலுத்துவோம். நமது அடுத்த பாடத்தில் 8 மற்றும் 9 ஆகிய வசனங்களைப் பார்த்து முடிப்போம்.

## கர்த்தருக்குள் சந்தோஷமாயிருத்தல் (4:4)

பவுல் பின்வரும் வார்த்தைகளுடன் தொடங்கினார்: *"கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்"* (வசனம் 4). அப்போஸ்தலர், சந்தோஷம் என்ற மீண்டும் மீண்டும் வரும் ஆய்வுக்கருத்திற்குத் திரும்பினார் (1:18; 2:17, 18, 28, 29; 3:1), ஆனால் இங்கு அவர் இன்னும் அதிக அழுத்தமாகக் கூறினார்: "கர்த்தருக்குள் *எப்பொழுதும்* சந்தோஷமாயிருங்கள்" (வசனம் 4அ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). மூலமொழி வசனத்தில் நிகழ்கால வினைச்சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. "கர்த்தருக்குள் சந்தோஷமாயிருப்பதை - எப்போதும் - *காத்துக்கொள்ளுங்கள்!*" என்பது நேரடியான தரவழைப்பாக இருக்கும். பின்வரும் உரையாடலை நான் கற்பனை செய்ய முடிகிறது:

''உங்களைப்போன்று சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுத் தவறாக நடத்தப்படும்போது கூடவா?"

"ஆம்!"

"எங்களைப் போன்று துன்புறுத்தப்பட்டுத் தவறாக நடத்தப்படும்போது கூடவா?"

"ஆம்!"

ஒருவேளை, இப்படிப்பட்ட மறுப்புரைகளைப் பவுல் முன்னெதிர் நோக்கியிருந்ததாலேயே, அவர் தமது புத்திமதியைத் திரும்பவும் கூறினார் எனலாம்: ''சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்!'' (வசனம் 4ஆ). வேறுவார்த்தைகளில் கூறுவதென்றால், "என்ன நடந்தாலும் சந்தோஷமாயிருங்கள்!"

அது எவ்வாறு சாத்தியமாகிறது? மீண்டும் ஒருமுறை, மூன்று வார்த்தைகள் (in the Lord) [தமிழில் ஒரு வார்த்தை] புறக்கணிக்கப்பட்டுவிடக் கூடாது: "கர்த்தருக்குள்.'' நாம் "வாழ்வின் சூழ்நிலைகளில்''[3] எப்போதுமே சந்தோஷமாயிருக்க இயலாது, ஆனால் நாம் "கர்த்தருக்குள்'' எப்போதுமே சந்தோஷமாய் இருக்க இயலும். நாம் ''கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றோம்''; இப்போது ''கிறிஸ்துவுக்குள்'' இருக்கும் நாம், நன்றி

நிறைந்தவர்களாக இருப்பதற்கு அதிகமானவற்றைப் பெற்றுக் கொண்டுள்ளோம் (ரோமர் 6:3, 4; கலாத்தியர் 3:26, 27; எபேசியர் 1:3)! ட்ரூமேன் ஸ்பிரிங் என்பவர், தாம் சந்தோஷமாயிருக்கக் காரணமான ஆசீர்வாதங்களைப் பின்வருமாறு பட்டியலிட்டார்:[4]

- அவர் எனது பாவங்களைக் கழுவியபோது அவர் எனக்குக் கொடுத்த இரட்சிப்பு.
- சத்தியத்தின் வெற்றி பற்றிய உறுதிப்பாடு.
- அவர் எனக்கு அளிக்கிற ஐக்கியம் (1 யோவான் 1:7, 8).
- அவர் எனக்குள் நிலைநாட்டியுள்ள நம்பிக்கை.
- பரலோகத்தில் எனது பெயர் எழுதப்பட்டுள்ளது என்ற உண்மை.
- தேவன் எனது தகப்பனாக இருக்கிறார் என்ற அறிவு.
- கிறிஸ்து எனது மத்தியஸ்தராக இருக்கிறார் என்ற உண்மை. அவர் எனது பலவீனங்களை அறிகிறார் மற்றும் வாழ்வின் ஒவ்வொரு சூழ்நிலையிலும் பிதாவினுடைய நிலைநிறுத்தும் வல்லமை என்னைப் பெலப்படுத்தும்படி எனக்காகப் பிதாவினிடத்தில் அவர் வேண்டுதல் செய்கிறார்.

இந்தப் பட்டியலுடன் நீங்கள் அனேகமாக வேறு எவற்றையேனும் கூட்டக்கூடும். யாரோ ஒருவர், "தொல்லை இல்லாதிருத்தல் அல்ல, ஆனால் கர்த்தர் பிரசன்னமாகி இருத்தலே சமாதானம் என்பதாக உள்ளது என்று கூறியுள்ளார்"!

## மற்றவர்களுடன் தொடர்புபடுத்துதல் (4:5)

"சந்தோஷமாயிருங்கள்" என்ற புத்திமதிக்கு நாம் கீழ்ப்படிந்தால், "கர்த்தருக்குள்" நமது சந்தோஷம் என்பது நமது இருதயத்தில் இருப்பதாக மாத்திரம் இராது; அது நம்மைச் சுற்றிலும் உள்ளவர்களுக்கும் தெரியவரும். பவுலின் அடுத்து கட்டளை, நாம் மற்றவர்களுக்கு எவ்வாறு தொடர்புபட்டு இருக்கிறோம் என்பதைப் பற்றியதாக உள்ளது: *"உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக" (வசனம் 5அ).*

"சாந்தகுணம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*epieikes* என்ற) வார்த்தை, "ஏறக்குறைய மொழிபெயர்க்கப்பட இயலாத உண்மையான மாபெரும் கிரேக்க வார்த்தைகளில் ஒன்றாக உள்ளது."[5] இவ்வார்த்தை, "moderation" (KJV) மற்றும் "forbearance" (ASV; RSV) போன்ற பல வகையான சொற்றொடர்களைக் கொண்டு விளக்கப்படுத்தப்பட்டுள்ளது. இது யாக்கோபு 3:17ல் "சாந்தம்" என்பதன் கருத்தை உள்ளக்குகின்றன (NIV; காண்க CEV மற்றும் ASV வேதாகமத்தில் உள்ள பக்கக்குறிப்பு): "gentle attitude" ["சாந்தமான எண்ணப்போக்கு"] (TEV), "gentle and kind" ["சாந்தமும் தயவும்"] (NCV), "reasonable and gentle" ["நியாயமான மற்றும் சாந்தமான"] (CJB). *Epieikes* என்பது "நியாயமானதன்மை" என்பதற்குரிய (*eikos* என்ற) வார்த்தைக்கு முன்பாக "மீது" என்று அர்த்தம் தரும் (*epi* என்ற) முன்னிடைச் சொல்லைச் சேர்த்துப் பெற்ற கூட்டு வார்த்தையாக உள்ளது. ஜெரால்டு ஹாத்தார்ன் என்பவர், "இது பெருமித மனப்பான்மை அல்லது 'இனிய நியாயமானதன்மை' என்பதன் நேர்மறைக் கருத்துக்களைக் கதிர்போன்று பரவச்செய்கிறது" என்று கருத்துத் தெரிவித்தார்.[6] இவ்வார்த்தை,

2 கொரிந்தியர் 10:1ல் இயேசுவை விவரிக்கப்பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் அர்த்தத்தை ரிச்சர்டு கேஃப்பின் என்பவர் விளக்கும் வழிமுறையை நான் விரும்புகிறேன்: "கிறிஸ்துவைப் போன்று மற்றவர்கள் மீது ஆழ்ந்த கவனம்."[7] பின்வரும் கருத்துக்களும் இன்னும் அதிகமானவைகளும் *epieikes* என்ற வார்த்தையினால் கருத்தாகத் தெரிவிக்கப்படுகின்றன:

- ஒரு இனிய [மன] ஒழுங்கமைவு ...
- அது தனது சுயவழியைக் கொண்டிருக்கும்படி வலியுறுத்துவதில்லை (காண்க 1 கொரிந்தியர் 13:4-7),
- நியாயமாக வாதிடப்பட முடிவதாக இருப்பது (அது நியாயமற்றதாக இருப்பதில்லை).

இதைப்போன்ற மனநிலையானது, 4:2ல் பவுல் குறிப்பிட்ட இரு சகோதரிகளின் ஒப்புரவுக்கு சுலபமாக வழிவகுக்கும். சகோதரத்துவ உறவில் மாத்திரமல்ல, ஆனால் *எல்லா* உறவு முறைகளிலும் இந்தப் பண்பு நமக்குத் தேவைப்படுகிறது. "*எல்லா* மனிதராலும்" இந்த எண்ணப்போக்கு "அறிந்திருக்கப்பட வேண்டும் [காணப்பட்டு மற்றும் உணர்ந்தறியப்பட்டு"[8] இருக்க வேண்டும்] என்று பவுல் கூறினார். "கர்த்தருக்குள்" சந்தோஷமாயிருத்தல் நமது மனநிலைப்பாடுகளுக்கு என்ன செய்கிறது என்பதை உலகம் காணவேண்டியது அவசியமாக உள்ளது!

இப்படிப்பட்ட நேர்மறையான நடத்தையைக் காத்துக்கொள்ளுதல் சுலபமல்ல. "இனிய நியாயத் தன்மையுடன்" இருத்தலுக்குப் பவுல் ஏற்கனவே ஒரு காரணத்தைக் கொடுத்திருந்தார்: நாம் "கர்த்தருக்குள்" இருக்கிறோம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இப்போது அவர் இன்னொரு காரணத்தைக் கூடுதலாகக் கூறினார்: "கர்த்தர் சமீபமாயிருக்கிறார்" (வசனம் 5ஆ). "சமீபமாய்" (Gk.: *eggus*) என்ற வார்த்தை, கர்த்தர் ஒருக்காலும் தூரத்தில் இருப்பதில்லை என்று அர்த்தப்படுத்தக் கூடும் (காண்க மத்தேயு 28:20), நாம் செய்கிற ஒவ்வொன்றையும் கர்த்தர் காணுகிறார் என்று உணர்ந்தறிதலானது (எபிரெயர் 4:13), நாம் மிகச்சிறப்பாகச் செயல்படும்படி நம்மை ஊக்குவிக்கிறது. அவர் எப்போதும் நம் அருகில் இருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளுதலானது (எபிரெயர் 13:5), நாம் செய்யத் தேவையானவற்றைச் செய்ய நமக்குப் பலம் அளிக்கிறது. இருப்பினும், "சமீபமாய்" என்ற வார்த்தை, சந்தர்ப்பப் பொருளில், அனேகமாக இயேசுவின் இரண்டாம் வருகை எப்போதுமே உடனடியாக நிகழக்கூடியதாக உள்ளது என்ற உண்மையைக் குறிப்பிடலாம் (காண்க பிலிப்பியர் 3:10, 11, 14, 20, 21). கிறிஸ்து எந்த வேளையில் வேண்டுமென்றாலும் வரக்கூடும் என்பதைப் புரிந்து உணருதலானது நம்மைச் சந்தோஷத்தினால் நிரப்ப வேண்டும் (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 22:20). அது நாம் - ஒவ்வொருவரைப் பற்றியும் - நினைக்க வேண்டிய மற்றும் செய்ய வேண்டிய பிரகாரம் செயல்பட, வல்லமை நிறைந்த செயலுக்காக உள்ளது (காண்க லூக்கா 12:40; 1 யோவான் 3:3)!

## கவலையில் இருந்து ஒதுங்கி இருத்தல் (4:6அ)

பவுலின் அடுத்த கட்டளை ஏறக்குறைய அதிர்ச்சியூட்டுவதாக உள்ளது: "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல்" *(வசனம் 6அ).* CEV

வேதாகமம் இதைப் பின்வருமாறு எளிமையாகக் கூறுகிறது: "எதைப் பற்றியும் கவலைப்படாதீர்கள்." கவலைப் படக்கூடாதா? ஒரு நிமிடம் பொறுங்கள்! கவலைப்படுதல் என்பது வாழ்வின் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பாகமல்லவா? நம் யாவருக்குமே கவலைப்படக் காரணங்கள் நிறைய உள்ளன: நமது குடும்பங்கள், நமது வேலைகள், நமது உடல் நலம், ஒவ்வொரு நாளும் நம்மை பாதிக்கும் தொந்தரவுக்குரிய எண்ணற்ற விஷயங்கள்![9] பாப் லியோன்ஸ் என்பவர், மூன்று வகையான மக்கள்தாம் உள்ளனர் என்று கூறினார்: தொல்லை கொண்டுள்ளவர்கள், தொல்லை கொண்டிருந்தவர்கள் மற்றும் தொல்லை கொண்டிருக்கப் போகிறவர்கள்.[10] விஷயம் இப்படி இருக்க, நாம் கவலைப்படக்கூடாது என்று பவுல் அர்த்தப்படுத்தியிருக்க மாட்டார் என்பது நிச்சயம்! நாம் இந்த வசனத்தை மறுபடியும் ஆய்வு செய்வோமாக. ஆம், அது இன்னமும் அதேபோன்றே வாசிக்கப்படுகிறது: "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல்" இருக்கவேண்டும்.

கவலைப்படாது இருக்கும்படி பவுல் பிலிப்பியர்களுக்குக் கட்டளையிட்டது ஏன்? அவர்களின் தொல்லைகளை அவர் இலேசானவைகளாக நினைத்தாரா? இல்லை, அவர்களின் பிரச்சனைகள் எவ்வளவு பெரியவையாக இருந்தாலும், தேவன் அந்தப் பிரச்சனைகளைக் காட்டிலும் பெரியவராக இருக்கிறார் என்பதை அவர்கள் அறிய வேண்டும் என்று அவர் விரும்பினார். கவலைப்படுதல் என்பது பாவமாக உள்ளது, ஏனெனில் அது, நமது சிரமங்களை எதிர்கொள்ளவும் வாழ்வு கொண்டுவரும் எந்த துன்பத்தினூடேயும் உயிர்பிழைத்திருக்கவும் பிதாவானவர் நமக்கு உதவக்கூடும் என்ற நம்பிக்கையில் குறைவுபடுவதைச் சுட்டிக்காண்பிக்கிறது (காண்க மத்தேயு 6:25-33).

"கவலை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*merimnao* என்பதன் ஒரு வடிவமான) வார்த்தை, அடிப்படையில் "அக்கறைகொள்ள" என்று அர்த்தப்படுகிறது.[11] இந்தக் கிரேக்க வார்த்தை அவ்வப்போது நேர்மறையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது (காண்க பிலிப்பியர் 2:20), ஆனால் இது பொதுவாக ஒரு எதிர்மறையான சொல்லர்த்தத்தைக் கொண்டுள்ளது. இயேசு, "ஆகையால், நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்" என்று கூறியபோது, அவர் இந்த வார்த்தையைப் பயன்படுத்தினார் (மத்தேயு 6:34). பேதுரு, "உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்" என்று எழுதியபோது, அவர் இந்த வார்த்தையின் பெயர்ச்சொல் வடிவம் ஒன்றைப் பயன்படுத்தினார் (1 பேதுரு 5:7). *Merimnao* என்பது அனேகமாக, "பல்வேறு திசைகளில் இழுக்க" என்று அர்த்தப்படுகிற *merizo* என்பதுடன் உறவுகொண்டுள்ளது.[12] கவலையுள்ள மனமானது இங்கும் அங்கும் இழுக்கப்படுகிறது: அது நம்பிக்கையினால் ஒரு வழியில் இழுக்கப்பட்டு, பயத்தினால் இன்னொரு வழியில் இழுக்கப்படுகிறது. சலிப்பு மற்றும் நம்பிக்கையற்ற தன்மை என்ற உணர்வே பொதுவாக இதன் விளைவாக உள்ளது. நான் அந்த உணர்வை அனுபவித்து இருக்கிறேன். அனேகமாக நீங்களும் அதை அனுபவித்து இருக்கலாம்.

## உதவி வேண்டுதல் (4:6ஆ)

நாம் கவலைப்படாது இருக்க வேண்டுமென்றால், நாம் என்ன செய்ய வேண்டும்? 6ம் வசனத்தின் பிற்பகுதி [ஆங்கிலத்தில்] "but" என்ற வார்த்தையுடன் தொடங்குகிறது [தமிழில் இவ்வாறு இவ்விடத்தில் வார்த்தை இல்லை]. வேறு

வார்த்தைகளில் கூறுவதென்றால், "கவலைப்படுவதற்குப் பதிலாக, *இதைச் செய்யுங்கள்*" என்றாகிறது. என்ன செய்வது? "*எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள்*" (வசனம் 6ஆ). ஜெபம் என்பதே கவலைக்குப் பவுல் பரிந்துரைக்கும் எதிர்மருந்தாக இருந்தது (இருக்கிறது). J. A. பெனகெல் என்பவர், "கவலையும் ஜெபமும் ... நெருப்பு மற்றும் நீர் ஆகியவற்றைக் காட்டிலும் அதிகம் எதிர்த்து நிற்பவையாக உள்ளன" என்று கூறினார்.[13] இத்துடன் நாம், "வெளிச்சம் மற்றும் இருள்," மற்றும் "சூடான மற்றும் குளிர்ந்த" என்பவற்றைக் கூடுதலாகக் கூறலாம்.

கவலையை "விரைவில் நிவிர்த்தியாக்கும்" ஒரு [குவிக்ஃபிக்ஸ் போன்ற] பொருளைத் தருதல் என்பது பவுலின் நோக்கமாக இருக்கவில்லை. மேக்ஸி டுன்னாம் என்பவர், அப்போஸ்தலர் கூறியபடி, "ஜெபத்தை ஏறெடுத்தல் என்பது ஒரு சுலபமான தீர்வாக இருப்பதில்லை," ஏனெனில் அப்போஸ்தலர் "ஜெபம் என்று நாம் பெயரிட்டுள்ள வார்த்தைகளைப் படுக்கை வேளையிலும் காலைவேளையிலும் திரும்பத் திரும்ப மனப்பாடமாகக் கூறுதலை" தமது சிந்தையில் கொண்டிருக்கவில்லை என்று எழுதினார். மாறாக அவர் பின்வருமாறு கூறினார்:

> [பவுல்] நமது வாழ்வைத் தேவனுக்கு முன்பாகக் கொண்டுவருதல், தேவன் மீதான நமது சார்ந்திருக்கும் தன்மையை ஆராய்தல், நமது வாழ்வைத் தேவனுடைய கரங்களில் ஒப்புவித்தல் என்ற மும்முரமான பணிகளைப் பற்றிப் பேசுகிறார் ... கவலை என்பது நிகழ்கால மற்றும் எதிர்காலச் சுமைகளை ஒருவர் தாமே சுமக்க மேற்கொள்ளும் முயற்சியாக உள்ளது; ஜெபம் என்பது அதைத் தேவனுடைய பாதுகாப்பான கரங்களில் விட்டு இணங்கி இருத்தலாக உள்ளது.[14]

சற்றேநேரத்திற்கு முன்னர் நாம் கூறிய ஒப்பீடுகளுக்குத் திரும்புவோம். நெருப்பின்மீது நீர் ஊற்றப்படுபோது, நெருப்பு அணைந்து விடுகிறது. வெளிச்சம் உதிக்கும்போது, இருள் மறைந்து விடுகிறது. ஏதேனும் ஒரு பொருளைச் சூடாக்கும்போது, அதன் குளிர்ந்த தன்மை மறைந்து போகிறது. அது போலவே, நாம் நமது பிரச்சனைகளைத் தேவனிடத்திற்கு எடுத்துச் சென்று அவரது கிருபைத்தன்மையில் நம்பிக்கை - உண்மையிலேயே நம்பிக்கை - வைக்கும்போது, கவலைகள் அகன்று போகும்.

6ம் வசனத்தைச் சற்றே நெருக்கமாகக் கண்ணோக்குதல் நமது சிந்தைகளில் இந்தக் கொள்கையை நிலைநிறுத்திக் கொள்ள உதவும். ஜான் வால்வூர்டு என்பவர் இவ்வசனத்தை, "வேதாகமத்தில் உள்ள மாபெரும் ஜெப புத்திமதிகளில் ஒன்று" என்று அழைத்தார்.[15] ரால்ஃப் மார்ட்டின் என்பவர், இவ்வசனப்பகுதி "ஒவ்வொரு காலகட்டத்திலும், வழிகாட்டுதலுக்காகக் கிறிஸ்தவர்கள் திரும்பியுள்ள ஒன்றாகவும், இதிலிருந்து ஊக்கமூட்டுதலையும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்ட பகுதியாகவும் உள்ளது" என்று கூறினார்.[16]

ஜெபத்திற்குப் பவுல் பயன்படுத்திய சொற்றொடர்களை நாம் கண்ணோக்குவதற்கு முன்னர், "எல்லாவற்றையுங்குறித்து" என்ற சொற்றொடரை உங்கள் சிந்தையில் அடிக்கோடிட்டுக் கொள்ளுதல்: "*எல்லாவற்றையுங்குறித்து* உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே

கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள்" (வசனம் 6ஆ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). "எல்லாவற்றையுங்குறித்து" என்பது ஒவ்வொரு சொற்றொடரையும் தகுதிப்படுத்துகிறது.

முதலாவது "ஜெபம்" என்பதற்கான ஒரு பொதுவான சொற்றொடராக உள்ளது: "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், ... *ஜெபத்தினாலும்*" (என்னால் வலியுறுத்தப்படுகிறது). "ஜெபம்" என்பதற்கான (*proseuche* என்ற) கிரேக்க வார்த்தை, தனக்கு முன்னதாக "க்கு" அல்லது "நோக்கி" என்று அர்த்தப்படும் (*pros* என்ற) முன்னிடைச் சொல்லைப் பெற்றதாக உள்ளது. இது "நோக்கி ஜெபம்" - (*euche*) அதாவது தேவனை நோக்கி - என்ற குறிப்பைக் கொண்டுள்ளது. என்ன நடந்தாலும் நாம், "அதை ஜெபத்தில் கர்த்தரிடம் எடுத்துச்செல்ல" வேண்டியதாக உள்ளது. முன்னதாக நாம், 6ம் வசனத்தின் முதற்பகுதியினுடைய CEV மொழிபெயர்ப்பைக் கண்ணோக்கினோம். இங்கு அந்த மொழிபெயர்ப்பின் அதிகமான விஷயம் உள்ளது: "எதைப்பற்றியும் கவலைப்படாதீர்கள், ஆனால் எல்லாவற்றைப் பற்றியும் ஜெபியுங்கள்."

அடுத்ததாகப் பவுல், வேண்டுதலினாலும் என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார்: "... எல்லாவற்றையுங்குறித்து ... ஜெபத்தினாலும் *வேண்டுதலினாலும்*" (என்னால் வலியுறுத்தப்படுகிறது). "வேண்டுதல்" (Gk.: *deesei*) என்பது ஜெபத்தின் ஒரு குறிப்பிட்ட வகையாக உள்ளது. இதற்கான ஆங்கில வார்த்தை சுட்டிக்காண்பிக்கிறபடி, இது சிலவற்றிற்காகத் தேவனிடத்தில் கேட்பதை உள்ளடக்குகிறது. எவற்றிற்காக? "எல்லாவற்றையுங்குறித்து" என்ற வார்த்தையை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். சார்லஸ் ஏர்ட்மேன் என்பவர், "எந்த ஒரு விஷயமும் [செய்யப்பட அது] தேவனுடைய வல்லமையைக் காட்டிலும் மிகவும் பெரியதாக இருப்பதில்லை, எந்த ஒரு விஷயமும் [செய்யப்பட அது] அவரது அக்கறைக்கு அப்பால் மிகவும் சிறியதாக இருப்பதில்லை" என்று எழுதினார்.[17]

"விண்ணப்பங்கள்" என்பது, "வேண்டுதல்" என்ற வார்த்தையுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்ட வார்த்தையாக உள்ளது: "எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ... கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள்" (என்னால் வலியுறுத்தப்படுகிறது). "விண்ணப்பங்கள்" என்பதற்கான (*aitemata* என்ற) கிரேக்க வார்த்தை "வேண்டுதல்" என்பதற்கான வார்த்தையை விட அதிகம் வெளிப்படையானதாக உள்ளது; இது திட்டவட்டமான மற்றும் குறிப்பான விண்ணப்பங்களை குறிக்கிறது. நமது வேண்டுகோள்கள் பொதுவானவையாக அல்ல, ஆனால் குறிப்பானவையாக இருக்க வேண்டும்; நமது ஜெபங்கள் கவனம்குவிக்கப்பட்டவையாக இருக்க வேண்டும். நாம் விடுக்க வேண்டிய சட்டப்பூர்வமான வேண்டுகோள்கள் பல உள்ளன.[18] நாம் நமக்காக விண்ணப்பங்களை ஏறெடுக்க முடியும். வில்லியம் பார்க்ளே என்பவர், "நாம் கடந்த காலத்தில் செய்தவற்றை *மன்னிக்கும்படியும், நிகழ்காலத்தில்* நமக்குத் தேவையானவற்றைத் தரும்படியும், *எதிர்காலத்தில்* உதவி மற்றும் வழிகாட்டுதல்கள் வேண்டும் என்றும் ஜெபிக்க முடியும்" எனக் கருத்துத் தெரிவித்தார்.[19] நாம் மற்றவர்களுக்காகவும் விண்ணப்பங்களை ஏறெடுக்கலாம்; இது பரிந்துபேசுதல் என்று அழைக்கப்பட்டுள்ளது (காண்க 1 தெசலோனிக்கேயர் 5:25; 2 தெசலோனிக்கேயர் 1:11; யாக்கோபு 5:16). இவ்வார்த்தை வற்புறுத்திக் கேட்டல் என்று இல்லாமல் விண்ணப்பங்கள் என்று

இருப்பதைக் கவனியுங்கள்.[20] ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வரும் தகுதியைக் கொண்டிருக்க வேண்டும்: "... என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" (காண்க லூக்கா 22:42).

இங்கு ஒரு கேள்வி எழும்பலாம்: "நான் ஏன் நமது விண்ணப்பங்களை 'தேவனுக்குத் தெரியப்படுத்த வேண்டும்? நாம் விரும்புவது என்ன மற்றும் நமக்குத் தேவையானது என்ன என்பதை அவர் ஏற்கனவே அறிந்திருப்ப தில்லையா?" ஆம் அவர் அறிந்திருக்கிறார் - ஆனால் அவர் இன்னமும் நாம் கேட்க வேண்டும் என்று விரும்புகிறார் (மத்தேயு 7:7, 8). இது தொடர்பாக ஏற்புடைய சிந்தனை ஒன்றை காஃப்மேன் என்பவர் கூடுதலாகக் கூறினார்: நாம் *கேட்காத* வரையிலும் நம்மிடத்தில் *விண்ணப்பங்கள்* அல்ல, ஆனால் *தேவைகளையே* நாம் கொண்டிருக்கிறோம்.[21]

"ஸ்தோத்திரத்தோடே" என்பது [இவ்விடத்தில்] பவுல் பயன்படுத்திய நான்காவது சொற்றொடராக உள்ளது: "... எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை *ஸ்தோத்திரத்தோடே* கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள்." "ஸ்தோத்திரம்" என்று மொழிபெயர்க்கப்பட்ட (eucharistia என்பதன் ஒரு வடிவமான) கிரேக்க வார்த்தை, "தாராளமாக கொடுக்க" என்று அர்த்தப்படுகிற (charizomai என்ற) கிரேக்க வார்த்தையுடன் "நல்ல" (eu) என்ற முன்னிடைச் சொல்லை இணைத்துப் பெறப்பட்ட வார்த்தையாக உள்ளது. இது நன்றியுணர்வு பெருக்கெடுக்கும் ஒரு இருதயத்தில் இருந்து தாராளமாகக் கொடுக்கப்பட்ட நன்றிகளைக் குறிப்பிடுகிறது. ஜெபங்கள் என்பவை "விருப்பப் பட்டியல்களாக" மாத்திரம் இருக்கலாகாது; அவைகள் நன்றிசெலுத்துதலினால் செறிவாக்கப்பட்டிருக்க வேண்டும்.

6ம் வசனம் முழுமைகளினால் நிரம்பியுள்ளது: ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம்; எல்லாவற்றையுங்குறித்து ஜெபியுங்கள்; எல்லாவற்றிற்காகவும் நன்றிகூறுங்கள்[22]! ஜோ பெர்னெட் என்பவர் "எல்லாவற்றிற்காகவும் ... தேவனைக்கு நன்றி செலுத்துங்கள்" என்று தலைப்பிடப்பட்ட பிரசங்கம் ஒன்றை எடுத்துரைத்தார்.[23] அதில் அவர், ஹிட்லரின் சித்திரவதை முகாமிற்கு அனுப்பப் பட்டிருந்த, கோர்ரீ டென் பூம் என்ற பெண்மணியைப் பற்றிக் கூறினார். நூற்றுக்கணக்கான பெண்கள், சின்னஞ்சிறிய பாசறைக்குள் நெருக்கி அடைக்கப் பட்டிருந்தனர். அந்தக் கட்டிடம் அசுத்தமாகவும் துர்நாற்றம் வீசுவதாகவும் இருந்தது - அதில் அவர்களை இரவும் பகலும் தாக்கிக் கொண்டிருந்த தெள்ளுப் பூச்சிகள் இருந்தன என்பது மிகவும் மோசமான விஷயமாக இருந்தது. அந்தப் பாசறைகளில் வேதாகமக் கலந்துரையாடல் ஒன்றின்போது, பிலிப்பியர் 4:6ம் வசனம் மேற்கோள் காண்பிக்கப்பட்டது. அந்தப் பெண்கள், தெள்ளுப்பூச்சிகளுக்காகத் தாங்கள் எவ்வாறு நன்றி செலுத்த முடியும் என்று எதிர்த்துப் போராடினர். தெள்ளுப்பூச்சிகளில் காப்பாற்றும் மதிப்பீடு எதையும் அவர்கள் காணவில்லை, ஆனாலும் அவர்கள் அவற்றிற்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்தினர். பிற்பாடு அவர்கள் மற்ற பாசறைகளில் இருந்த பெண்களை, ஆண் காவலர்கள் தவறாகப் பயன்படுத்திக் கொண்டதையும், ஆனால் [ஜெபித்த] அந்தப் பெண்களின் பாசறைகளில் இருந்த தெள்ளுப் பூச்சிகள் நிமித்தம் அவர்கள் அங்கு வரவோ அல்லது அந்தப் பெண்களைத் தவறாகப் பயன்படுத்தவோ இல்லை என்பதையும் அறிந்தனர்.

நாம் யாவரும் நமது வாழ்வில் "தெள்ளுப்பூச்சிகளை" - நன்றி செலுத்தக்

கடினமான விஷயங்களை - கொண்டிருக்கிறோம், ஆனால் நாம், "[தம்மில்] அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக" நடப்பிக்கிற தேவனை ஆராதிக்கிறோம் என்பதை மறந்து விடலாகாது (ரோமர் 8:28). "எல்லாவற்றிற்காகவும்" நன்றி செலுத்திக் கற்றுக்கொள்ளுதல் என்பது நன்றியுணர்வின் வெளிப்பாடாக இருப்பது மட்டுமின்றி, கீழ்ப்படிதலின் வெளிப்பாடாகவும் உள்ளது. அவ்வாறு இருக்கையில் நாம், செயல்விளைவில் "எனது வாழ்வில் என்ன நடந்தாலும், அதில் நான் தேவனுடைய கரத்தைக் காண முயற்சி செய்து அவருக்குத் துதிசெலுத்துவேன்" என்று கூறுகிறோம்.

நாம் நேர்மறையான ஆசீர்வாதங்கள் பலவற்றையும் கொண்டிருக்கிறோம். நீங்கள் சற்றே நிதானித்து, உங்களுக்குக் கிடைத்துள்ள ஆசிர்வாதங்களைப் பட்டியலிட விரும்பலாம், அந்தப் பட்டியலின் உச்சியில் உங்கள் ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் இருக்க வேண்டும். வாழ்வானது உங்கள் இளமை, உங்கள் உடல் நலம், உங்கள் செல்வம், உங்கள் நண்பர்கள், உங்கள் குடும்பம் ஆகியவற்றை உங்களை விட்டு எடுத்துப் போடலாம் - ஆனால் எதுவுமே "கிறிஸ்துவின் அன்பைவிட்டு [உங்களை] பிரிப்பது" என்பது இயலாது (ரோமர் 8:35)!

## விளைவு - சமாதானம்! (4:7)

நாம் இப்போது ஆச்சரியமான, ஏறக்குறைய நம்ப இயலாத வாக்குத்தத்தம் ஒன்றிற்கு வருகிறோம்: *"அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்"* (வசனம் 7). "அப்பொழுது" என்ற வார்த்தையை விட்டுத் தாண்டிச் செல்லாதீர்கள். 7ம் வசனத்தில் உள்ள வாக்குத்தத்தம் 4முதல் 6வரை உள்ள வசனங்களுடன் பிணைக்கப்பட்டுள்ளது: நீங்கள் எப்போதும் மகிழ்ச்சி*யாயிருந்தால்*; நீங்கள் எப்போதும் இனிமையான நியாயத்தன்மையை செயல் *விளக்கப்படுத்தினால்*; கவலைப்படுவதற்குப் பதிலாக நீங்கள் *ஜெபித்தால்*; அப்போது நீங்கள் "எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானத்தை" கொண்டிருப்பீர்கள்.

"தேவசமாதானம்" என்பது தேவன் தருகிற சமாதானமாக, அவர் "சமாதானத்தின் தேவனாக" இருப்பதால் (வசனம் 9), அவர் மாத்திரமே தரக்கூடிய சமாதானமாக உள்ளது. "எல்லாப் புத்திக்கும் மேலான" என்பது கிரேக்கச் சொற்றொடரான *huperechousa* ("மேலாகக் கொண்டிருத்தல் [அல்லது பற்றிக்கொண்டிருத்தல்]") panta ("எல்லா" அல்லது "ஒவ்வொரு") *noun*[24] ("மனம்" அல்லது "சிந்தித்தல்") என்பதின் மொழிபெயர்ப்பாக உள்ளது. இது "எல்லா சிந்தைக்கும் மேலான" அல்லது "எல்லா சிந்தித்தலுக்கும் மேலான" என்று அடிப்படையாக அர்த்தப்படுகிறது. இவ்வார்த்தை, தேவன் மாத்திரமே தரக்கூடிய சமாதானத்தை உண்டாக்குதல் மனித மனதால் முடியாததாக உள்ளது என்று குறிக்கக் கூடும். அனேகமாக, ஒரு எளிய விளக்கம் இங்கு நோக்கமாக உள்ளது: தேவனுடைய சமாதானம், முடிவுக்கு உட்பட்ட மனங்களினால் புரிந்துகொள்ள கூடுவதற்கு வழியே இல்லை என்று கூறும்படி, அவ்வளவு அற்புதமாக, அவ்வளவு திகைப்புக்குரியதாக உள்ளது. பல்வேறு மொழிபெயர்ப்புகள் பின்வரும் தெளிவுபடுத்துகிற சொற்றொடர்களைப் பயன்படுத்துகின்றன:

- NCV: "நாம் அதைப் புரிந்துகொள்ள இயலாத அளவுக்குப் பெரியது."

- Phillips: *"மனிதரீதியான புரிந்துகொள்ளுதலைக் கடந்து நிற்கிறது."*
- LB: *"மனித மனம் புரிந்து கொள்ளக் கூடியதைக் காட்டிலும் அதிகம் அதிகம் அற்புதம் நிறைந்தது."*

*இப்படிப்பட்ட சமாதானத்தைக் கொண்டிருப்பவர்கள், அதைக் கொண்டிருத்தல் என்றால் என்ன என்று முழுமையாக விளக்க இயலாது, மற்றும் அது இல்லாதவர்கள் அதனால் தடுமாற்றம் கொள்கின்றனர். அவர்களைப் போன்றே கிறிஸ்தவர்களும் அதே பிரச்சனைகளைக் கொண்டிருந்தும், சமாதானம் கொண்டவர்களாக இருப்பது எவ்வாறு என்பதை அவர்கள் புரிந்துகொள்ள முடிவதில்லை!*

> *ஹரோல்டு போஸ்லீ என்பவர், 1930களில் [அமெரிக்காவின்] மாபெரும் தாழ்ச்சியின் நாட்களில் நடந்த ஒரு வரலாற்றை நினைவுகூர்ந்தார். தனிச்சிறப்பு வாய்ந்த வழக்கறிஞரும் கடவுள் நம்பிக்கை இல்லை என்று அறிக்கை இட்டிருந்தவருமான கிளாரென்ஸ் டார்ரோ என்பவர் உட்பட, பேச்சாளர்களின் குழு ஒன்று, சிகாகோவின் தெற்குப் பகுதியில் இருந்த - அவர்களில் பெரும்பான்மையானோர் கறுப்பர்களாக இருந்தனர் - மக்கள் கூட்டத்திற்கு உரையாற்றிக் கொண்டிருந்தது. பொருளாதார சூழ்நிலைகள் மிகவும் மோசமாக இருந்தன: பணமும் வேலைகளும் மிகவும் அரிதாக இருந்தன, மற்றும் கறுப்பின மக்களின் அவலநிலையைச் சுட்டிக்காண்பிக்க, டார்ரோ என்பவர் அந்த உண்மையைப் பயன்படுத்தினார். அவர்களின் கஷ்டங்களைத் தொகுத்துரைத்து முடிவாக அவர், "இன்னும் நீங்கள் பாடுகிறீர்களா? உங்களைப் போல யாருமே பாட இயலாது! பாடுவதற்கு நீங்கள் கொண்டுள்ளது என்ன?" என்று கேட்டார். மக்கள் கூட்டத்தில் இருந்து, திடீரென்று மின்னல் மின்னினாற்போன்று ஒரு பெண்மணி எழுந்து, நாங்கள் பாடுவதற்கு இயேசுவைக் கொண்டுள்ளோம் என்று உரத்துக் கூவினார், மற்றும் அவருடைய பதிலைத் தொடர்ந்து பல "ஆமென்" கள் மற்றும் "ஆம் ஆம்" என்பவை வந்தன ...*
>
> *வழக்கத்திற்கு மாறாக, டார்ரோ ஒருமுறை ... பதிலைக் கொண்டிருக்கவில்லை, ஏனெனில் அவர், பகுத்தறியப்படக் கூடாத, அரிதாகவே பேசவும் பட்டிருந்த, மனித சொற்றொடர்களில் கூறுவதென்றால் - எல்லாவற்றையும் செய்வதற்குத் தங்களைப் பெலப்படுத்தக்கூடிய ஒருவருடன் தாங்கள் நடந்தபடியினால், கண்ணீர்கள் மற்றும் தங்களின் பயங்களுக்கும் மேலாகவும் பாடக்கூடிய மக்களை - முகமுகமாக எதிர்கொண்டிருந்தார் [பிலிப்பியர் 4:13].*[25]

*கிறிஸ்துவின் அன்பைப் போன்றே, தேவன் மீது விசுவாசம் கொண்டு அவர் மீது நம்பிக்கை வைத்திருக்கும் பிள்ளையானவர் கொண்டிருக்கக் கூடிய சமாதானம் "எல்லாப்புத்திக்கும் மேலான" தாக உள்ளது (எபேசியர் 3:19).*

*பவுல் பிலிப்பியர்களிடத்தில், எல்லாப் புத்திக்கும் மேலான இந்த சமாதானம் "உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்" என்று கூறினார் (வசனம் 7ஆ, இ).*

"காத்துக்கொள்ளும்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*phroureo* என்பதன் ஒரு வடிவமான) கிரேக்க வார்த்தை, "ஒரு இராணுவச் சொற்றொடராக, காவற்படையின் விஷயத்தில்," காவல் செய்வதினால் பாதுகாத்துக்கொள்ள என்று அர்த்தப்படுகிறது … இது கிறிஸ்தவர்களின் பாதுகாப்பிற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது … , மற்றும் அவர் எல்லாவற்றையும் தேவனுடைய கரத்தில் ஒப்புவித்துவிடும்போது, அவர் கொண்டுள்ள பாதுகாப்பு என்ற கருத்தில் உள்ளது.[26] மிகவும் பாதுகாக்கப்பட்ட மதில் சூழ்ந்த ஒரு நகரைக் கற்பனை செய்து பாருங்கள். பின்பு அதனுள் இருக்கும் ஒரு குடிமகன், தாம் *பாதுகாப்பாக* இருப்பதை அறிந்துள்ளதால், எவ்விதக் கலக்கமும் இன்றி, தமது வேலைக்குச் செல்வதைக் கண்ணோக்குங்கள். "காத்துக்கொள்ளும்" என்று அர்த்தப்படுகிற வார்த்தையினால் தூண்டப்படும் உருவகம் இதுவே ஆகும்.

இருப்பினும், *எது* காத்துக்கொள்ளப்படுகிறது என்பதைக் கவனியுங்கள்: "… உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும்." "இருதயங்கள்" மற்றும் "சிந்தைகள்" என்பது ஒரு கிறிஸ்தவரின் உள்ளான முழு இருப்பையும் விவரிக்கிறது. ("இருதயம்" என்ற வார்த்தை ஒரு வசனப் பகுதியில் ஒன்றாக இணைக்கப்படுகிற போது, அவ்வார்த்தையின் வலியுறுத்தமானது உணர்வெழுச்சிகளின் மீதும், "சிந்தை" என்பதன் வலியுறுத்தமானது சிந்தனைகள் மீதும் உள்ளது.) *புறம்பான* மனிதனல்ல, ஆனால் *உள்ளான* மனிதனே காக்கப்படுகிறான். இந்தப் படிப்பிற்கான முன்னுரையில் நான், உண்மையான சமாதானம் என்றால் என்ன என்று பலர் புரிந்து கொள்ளாததே சமாதானத்திற்கான தடையாக உள்ளது என்று கருத்துக் தெரிவித்தேன். பலர், தங்கள் புறம்பான மனிதனைத் தேவன் காத்துக்கொள்ள வேண்டும் என்று விரும்புகின்றனர். அவர்கள் எப்போதுமே தங்களைச் சுற்றிச் சமாதானமான சூழ்நிலைகள் இருக்க வேண்டும் என்று விரும்புவார்கள். கர்த்தரின் மக்கள் எப்போதுமே புயலினால் பாதிக்கப்படாத, நோய்க்கு எதிர்த்து நிற்கக் கூடிய மற்றும் ஆவேசமாகத் தடைசெய்யும் தடுப்புகள் ஆகியவற்றினால் சூழப்பட்டிருப்பார்கள் என்று ஒருக்காலும் அவர் வாக்குத்தத்தம் செய்ததில்லை. அவர்களின் - [நமது] உடல்களுக்கு என்ன நேரிட்டாலும் - இருதயங்களையும் சிந்தைகளையும் காத்துக்கொள்வதாகவே அவர் வாக்குத்தத்தம் *செய்துள்ளார்* ஆகவே பவுலின் "புறம்பான மனிதன்அழிந்து கொண்டிருந்தாலும்" - அவரது "உள்ளான மனிதன் நாளுக்குநாள் புதிதாக்கப்பட்டதால்" - அவர் சமாதானம் கொண்டிருக்க முடிந்தது (2 கொரிந்தியர் 4:16)!

நமது வேதபாட வசனப்பகுதி "கிறிஸ்து இயேசுவுக்குள்" இருக்கிறவர்களுக்கு மாத்திரமே இந்தத் தற்காப்பை வாக்குறுதி அளிக்கிறது என்பதை நான் மீண்டும் ஒருமுறை வலியுறுத்த வேண்டும் (வசனம் 7இ): நாம் அவருக்குள் "ஞானஸ்நானம்" பெற்றுக்கொள்ளாதிருந்தால் (ரோமர் 6:3), மற்றும் நாம் அவருக்குள் நடக்காது (வாழாது) இருந்தால் (காண்க கொலோசெயர் 2:6), அப்போது நமக்குப் பாதுகாப்புப் பற்றி வாக்குத்தத்தம் எதுவும் இராது. ஜான் நைட் என்பவர், "நாம் தேவனுக்குக் கீழ்ப்படிவதினாலும் அவரது அதிகாரத்திற்கு ஒப்புக்கொடுப்பதினாலும் மாத்திரமே தேவனுடைய சமாதானம் மற்றும் பாதுகாப்பு ஆகிய கொடைகளை மகிழ்வுடன் அனுபவிக்கிறோம்" என்று எழுதினார்.[27]

## முடிவுரை

சமாதானம் - நாம் அதை விரும்புகிறோம், ஆனால் அதைக் கொண்டிருப்பதற்கு அவசியமானதைச் செய்யப் போதுமான அளவிற்கு அதை நாம் விரும்புகிறோமா? இங்கிலாந்து நாட்டின் முன்னாள் பிரதம மந்திரியான ஜேம்ஸ் ராம்ஸே மெக்டொனால்டு என்பவர், தொடர்ந்து இருக்கக்கூடிய சமாதானத்தைப் பற்றி இன்னொரு அரசு அதிகாரியிடம் பேசிக்கொண்டிருந்தார். திரு. மெக்டொனால்டு அவர்களின் கண்ணோட்டங்கள் சூதுவாதற்றவை என்று அந்த அதிகாரி நினைத்தார். "சமாதானத்திற்கான விருப்பம் என்பது அதை உறுதிப்படுத்த வேண்டும் என்ற அவசியம் இல்லை" என்று அவர் கூறினார். அதற்கு திரு. மெக்டொனால்டு, "உண்மைதான், அதேபோன்று, உணவுமீதான விருப்பம் உங்கள் பசியைத் திருப்திப்படுத்துவதில்லை, ஆனால் அது குறைந்த பட்சம் உங்களை ஒரு உணவகத்திற்குச் செல்லத்தொடங்கச் செய்கிறது" என்று கூறினார்.[28] நாம் போதிய அளவு பலமாக சமாதானத்தை விரும்பினால், அது நம்மை நாம் செய்யத் தேவையானவற்றைச் செய்யத் தொடங்க வைத்துவிடும்:

- கர்த்தருக்குள் சந்தோஷமாயிருத்தல்,
- மற்றவர்களுடன் ஒரு இனிய நியாயமான தன்மையுடன் உறவுபடுதல்,
- கவலையில் இருந்து விலகியிருத்தல், ஏனெனில் நமது ...
- விண்ணப்பங்கள் கர்த்தருக்குத் தெரிவிக்கப்பட்டிருப்பதால்.

பவுலின் அறிவுறுத்துதல்களுக்கு நாம் கீழ்ப்படிந்தால், நாம் பின்வரும் விரும்பத்தக்க விளைவைக் கொண்டிருப்போம்: "எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் [நமது] இருதயங்களையும் [நமது] சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்"!

குறிப்புகள்

[1]இந்தப் பத்தியை நீங்கள் வாழும் பகுதிக்குத் தேவையான வகையில், தழுவியமைத்து விரிவாக்கிக் கொள்ளுங்கள். [2]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989), 96. See also John F. Walvoord, *Philippians: Triumph in Christ,* Everyman's Bible Commentary (Chicago: Moody Press, 1971), 100. [3]வாழ்வின் மாற்றக்காரணிகள் மற்றும் நாம் கட்டுப்பாடு கொண்டிராத விஷயங்கள் ஆகியவற்றின் பட்டியல் ஒன்று, Avon Malone, *Press to the Prize* (Nashville: 20th Century Christian, 1991), 104. என்ற புத்தகத்தில் தரப்பட்டுள்ளது. நீங்கள் வாழும் இடத்திற்குப் பொருத்தம ான ஒரு பட்டியலைத் தயாரியுங்கள். [4]Adapted from a devotional by Truman Spring in *Power for Today* (June 1956): 40. [5]Gerald F. Hawthorne, *Word Biblical Commentary,* vol. 43, *Philippians*, ed. David A. Hubbard and Glenn W. Barker (Waco, Tex.: Word Books, 1983), 182. [6]Ibid. [7]Richard B. Gaffin, notes on Philippians, *The NIV Study Bible*, ed. Kenneth Barker (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985), 1808. [8]Hawthorne, 182. *Gnostheto* என்பது, "தெரிந்திருப்பதாக" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையாகும். [9]இதை நீங்கள் வாழும் இடத்திற்குப் பொருந்துமாறு மிகவும் திட்டவட்டமானதாக ஆக்கிக் கொள்ளுங்கள். [10]Bob Lyons, "God's Survival Kit," Sermon preached at the Judsonia church of Christ, Judsonia, Arkansas, 16 February 2003.

[11]"Careful" என்ற KJV வேதாகமத்தின் தரவழைத்தலானது மிகச்சரியான மொழிபெயர்ப்பாக உள்ளது, ஆனால் இன்றையநாட்களில் நாம், "careful" என்ற வார்த்தையை, KJV காலத்தில் பயன்படுத்தப்பட்ட அதே கருத்தில் பயன்படுத்துவதில்லை. அந்தக் காலத்தில் இது "அக்கறையின் முழுமை" என்று அர்த்தப்படுத்திற்று; இப்போது அது "பாதுகாப்பாக இருக்க கவனம் எடுத்துக் கொள்ளுதல்" என்று அர்த்தப்படுகிறது. KJV வேதாகமத்தில் "careful" என்று இருப்பதால், பல விளக்கவுரையாளர்கள், பவுல் "முறைப்படியான கவலை மற்றும் அக்கறையை" அல்ல, ஆனால் அதற்கு மாறாக "சுயத்தை மையமாகக் கொண்ட, எதிர்விளைவை உண்டாக்கும் கவலையையே கண்டனம் செய்தார்" என்று குறிப்பிடுகின்றனர் (காண்க Gaffin, 1808). [12]W. E. Vine, *The Expanded Vine's Expository Dictionary of New Testament Word*s, ed. John R. Kohlenberger III (Minneapolis: Bethany House Publisher, 1984), 160. [13]Quoted in John A. Knight, *Beacon Bible Expositions,* vol. 9, *Philippians, Colossians, Philemon* (Kansas City, Mo.: Beacon Hill Press, 1985), 114. [14]Maxie D. Dunnam, *Galatians, Ephesians, Philippians, Colossians, Philemon*, The Communicator's Commentary series, ed. Lloyd J. Ogilvie (Waco, Tex.: Word Books, 1982), 313-14. [15]Walvoord, 106. [16]Ralph P. Martin, *The Epistle of Paul to the Philippians,* rev. ed., Tyndale New Testament Commentaries, ed. R. V. G. Tasker (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 171. [17]Charles R. Erdman, *The Epistle of Paul to the Philippians* (Grand Rapids, Mich.: Baker Book House, 1983), 141. [18]நாம் ஏறெடுக்கக் கூடாத விண்ணப்பங்களும் உள்ளன (எடுத்துக்காட்டிற்கு யாக்கோபு 4:3ஐக் காணவும்). காஃப்மேன் என்பவர் சட்டப் பூர்வமான விண்ணப்பங்களின் பட்டியல் ஒன்றைக் கொடுத்தார் (James Burton Coffman, *Commentary on Galatians, Ephesians, Philippians, and Colossians* [Austin, Tex.: Firm Foundation Publishing House, 1977], 321-22). [19]William Barclay, *The Letters to the Philippians, Colossians, and Thessalonians,* rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 77. [20]Leon Barnes, *That You May Know Christ: Studies from Philippians* (Searcy, Ark.: Resource Publications, 1992), 149.

[21]Coffman, 321. [22]கண்டிப்புடன் பேசுவதென்றால், இவ்வசனம் "எல்லாவற்றிற்காகவும்" என்றல்ல, ஆனால் "எல்லாவற்றிலும்" என்றே கூறுகிறது. ஒரு குறிப்பிட்ட விஷயத்திற்காக நீங்கள் நன்றி செலுத்த முடியாது இருக்கும்போது கூட, அந்தச் சூழ்நிலையில் நீங்கள் நன்றி செலுத்த வேண்டிய சில விஷயங்கள் உள்ளன. எந்தச் சூழ்நிலையிலும் நன்றி செலுத்துகிறவர்களாக இருத்தல் எவ்வாறு என்பது பற்றி ஒரு நல்ல பகுதி Coffman, 320 ல் கொடுக்கப்பட்டுள்ளது. [23]Joe R. Barnett, *Live! with Peace, Power and Purpose,* The 20th Century Sermons Series, vol. 11 (Abilene Tex.: Biblical Research Press, 1978), 64-70. தெள்ளுப் பூச்சிகள் பற்றிய விவரிப்பு பக்கம் 66-68ல் காணப்படுகிறது. [24]இது "noon" என்று உச்சரிக்கப்படுகிறது. [25]Dunnam, 320-21. [26]Vine, 513. [27]Knight, 115. இதே போன்ற விளக்கங்கள் Martin, 173, மற்றும் Hawthorne, 185 ஆகிய புத்தகங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. [28]James S. Hewett, ed., *Illustrations Unlimited* (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1988), 403 என்ற புத்தகத்தில் இருந்து தழுவப்பட்டது.